**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**கல்விப்பீடம்**
**கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025**
**இறுதிப் பரீட்சை**
**STP9813– கல்வியில் ஆய்வு முறைகள்**
**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

0157

**திகதி:- 31.01.2026** **நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30**

**அறிவுறுத்தல்கள் :**

- **வினா ஒன்று (01) மற்றும் வேறு ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
- **வினா ஒன்று (01) இற்கான விடையை இந்தத் தாளிலேயே எழுதவும்.**
- **ஒரே ஆய்வுப் பிரச்சினை ஒன்றுக்கும் மேற்பட்ட வினாக்களுக்கு பயன்படுத்தப்படக்கூடாது.**

1. கீழ்வரும் கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு, தத்தமது கல்வி வலயங்களுக்குள் மேற்கொள்ளக்கூடிய ஆய்வு முன்மொழிவுகளை சமர்ப்பிக்க ஆய்வுகளுக்கான தேசிய நிறுவகம் (NIER) ஆய்வாளர்களையும் கல்வியாளர்களையும் அழைக்கிறது எனக் கருதுக.

   **i.** கற்றல் - கற்பித்தலில் செயற்கை நுண்ணறிவின் (AI) பயன்பாட்டில் ஆசிரியர்களின் தயார்நிலை மற்றும் ஒழுக்கநெறி நடைமுறைகள்

   **ii.** பாடசாலை மட்டத் தொடர் கணிப்பீடுகளை நடைமுறைப்படுத்தல்

   **iii.** மாணவர்களிடையே 4Cs (விமர்சன சிந்தனை, தொடர்பாடல், ஒத்துழைப்பு, மற்றும் படைப்பாற்றல்) விருத்தி செய்தல்.

   **iv.** ஆசிரியர் இடம்பெயர்வு மற்றும் கிராமப்புறப் பாடசாலைகளில் உள்ள உள்ளூர்மையான ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மாணவர்களின் கல்வி செயலாற்றுகை

   **v.** நெருக்கடிக்குப் (அனர்த்தத்துக்கு) பிந்தைய சமூகத்தில் சமூக – மனவெழுச்சி கற்றல் (Social – Emotional Learning – SEL) மற்றும் உளவியல் ஆதரவு

   **vi.** "உள்ளடக்கிய கல்வி அலகுகள்" (Inclusive Education Units – IEUs) இலிருந்து பொதுவான வகுப்பறைகளுக்கான மாணவர்களின் மாற்றம்

   **vii.** சமூக முன்னேற்றம் மற்றும் கல்விசார் சமத்துவத்தில் இருமொழிக் கற்பித்தலின் தாக்கம்

   **viii.** எண்ணிம (டிஜிட்டல்) கதைசொல்லல் மூலம் ஆரம்ப நிலை மாணவர்களின் எழுத்தறிவு திறன்களை விருத்தி செய்தல்

   **தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருளை குறிப்பிடுக :** ..............................................................................

   **i.** மேலே தரப்பட்ட கருப்பொருள்களில் ஒன்றுடன் தொடர்புடையதாக நீங்கள் அடையாளம் கண்டுள்ள ஒரு குறிப்பிட்ட ஆய்வு பிரச்சினையைக் குறிப்பிடுக.

   ..............................................................................
   ..............................................................................
   ..............................................................................
   ..............................................................................
   ..............................................................................
   ..............................................................................

   **(05 புள்ளிகள்)**

ii. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுப் பிரச்சினையை ஆய்வு செய்வதின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

(04 புள்ளிகள்)

iii. மேற்கூறிய ஆய்வு பிரச்சினையை ஆய்வு செய்வதற்கான பிரதான நோக்கத்தை குறிப்பிடுக. மற்றும் உங்கள் ஆய்வு பிரச்சினையுடன் தொடர்புடைய **மூன்று (03)** ஆய்வு குறிக்கோள்கள் அல்லது ஆய்வு வினாக்கள் அல்லது கருதுகோள்களை வடிவமைக்கவும்.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

(09 புள்ளிகள்)

iv. மேல் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்காக நீங்கள் தேர்தெடுத்துள்ள ஆய்வு வடிவமைப்பை காரணங்களுடன் விளக்குக.
(குறைந்தது இரண்டு (02) காரணங்களுடன்)

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

(04 புள்ளிகள்)

v. நீங்கள் பயன்படுத்த விரும்பும் மாதிரி மற்றும் மாதிரியெடுப்பு நுட்பங்களை காரணங்களுடன் குறிப்பிடுக.

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

**(05 புள்ளிகள்)**

**vi.** உங்கள் ஆய்வுக் குறிக்கோள்களை அடைவதற்குப் பொருத்தமானதாக இருக்கும் வகையில் நீங்கள் முன்மொழியும் தரவுச் சேகரிப்பு கருவிகளைக் குறிப்பிடுக. மற்றும் அவற்றின் பொருத்தத்தைக் காரணங்களுடன் நியாயப்படுத்துக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

**(06 புள்ளிகள்)**

**vii.** ஆய்வில் சேகரிக்கப்படும் தரவுகளுக்காக நீங்கள் பயன்படுத்த விரும்பும் பகுப்பாய்வு நுட்பங்களைக் குறிப்பிடுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

**(03 புள்ளிகள்)**

**viii.** உங்கள் ஆய்வுக்கான எதிர்பார்க்கப்படும் **இரண்டு (02)** வரையறைகள் (Limitations) மற்றும் **இரண்டு (02)** எல்லைப்படுத்தல்களை (delimitations) குறிப்பிடுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் = 40 புள்ளிகள்)**

2. ஆய்வு வடிவமைப்பு என்பது, ஆய்வுப் பிரச்சினையை தீர்க்கும் நோக்கில் ஆய்வின் பல்வேறு கூறுகள் ஒருங்கிணைந்த மற்றும் தர்க்கரீதியான முறையில் இணைப்பதற்காக ஆய்வாளர் தேர்ந்தெடுக்கும் மொத்தத் திட்டமாகும்.

   i. பரிசோதனை (Experimental) ஆய்வு வடிவமைப்பு மற்றும் அளவைநிலை (Survey) ஆய்வு வடிவமைப்புக்களுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக. கல்வி ஆய்விலிருந்து பொருத்தமான உதாரணங்களுடன், ஒவ்வொரு வடிவமைப்பினதும் **இரண்டு (02)** நன்மைகள் மற்றும் **இரண்டு (02)** வரையறைகளை ஆராய்க. **(07 புள்ளிகள்)**

   ii. செயல்நிலை ஆய்வின் (Action Research) **மூன்று (03)** முக்கிய பண்புகளை விளக்கி, ஒரு உதாரணத்துடன், அது மற்ற ஆய்வு வடிவமைப்புக்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதை ஆராய்க. **(07 புள்ளிகள்)**

   iii. கல்விச் சூழலில் செயல்நிலை ஆய்வின் **மூன்று (03)** பலங்கள் மற்றும் **மூன்று (03)** வரையறைகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்யவும். **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் = 20 புள்ளிகள்)**

3. தரவுப் பகுப்பாய்வு என்பது, பயனுள்ள தகவல்களை கண்டறிவதற்கும் ஆய்வில் முடிவெடுத்ததை ஆதரிப்பதற்கும், தரவுகளை சரிபார்த்தல், சுத்திகரித்தல், நிலைமாற்றுதல் மற்றும் மாதியுருவாக்கம் செய்வது போன்ற செயன்முறைகளை முறையாக மேற்கொள்ளும் செயன்முறையாகும்.

   i. பெயரளவை (Nominal), வரிசைப்படுத்தல் மட்டம் (Ordinal) ஆயிடை மட்டம் (Interval) விகித அளவு மட்டம் (Ratio) ஆகியவற்றை சுருக்கமாக விளக்குக. ஒவ்வொரு அளவை மட்டங்களுக்கும் பொருத்தமான தரவுப் பகுப்பாய்வு முறைகளை அடையாளம் காண்க. **(06 புள்ளிகள்)**

   ii. கல்வி ஆய்வில் மையப் போக்கு அளவைகள் பயன்படுத்துவதன் நோக்கம் மற்றும் பயன்பாட்டை, பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. **(06 புள்ளிகள்)**

   iii. உங்கள் ஆய்வில் சேகரிக்கப்படும் பண்புசார் (Qualitative) தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக நீங்கள் பின்பற்றும் குறைந்தது **மூன்று (03)** முக்கிய படிகளை விவரிக்கவும், மேலும் ஒவ்வொரு படியின் முக்கியத்துவத்தையும் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. **(08 புள்ளிகள்)**

**(மொத்தம் = 20 புள்ளிகள்)**

4. ஆய்வு ஒழுக்கநெறி (Research Ethics) என்பது, ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுகளை நேர்மை, உண்மைத்தன்மை மற்றும் பங்கேற்பாளர்களின் மீதான மரியாதையுடன் மேற்கொள்ள வழிகாட்டும் நெறிமுறைகள் மற்றும் வாண்மைரீதியான தரநிலைகளைக் குறிக்கிறது.

   i. ஆய்வு ஒழுக்கநெறியின் **மூன்று (03)** முக்கிய அடிப்படைகளை விவாதித்து, இவ்வடிப்படைகள் கல்வி ஆய்வில் ஏன் மிக முக்கியமானவை என்பதை விளக்குக. **(07 புள்ளிகள்)**

   ii. கல்வி ஆய்வில் ஆய்வாளர்கள் எதிர்கொள்ளும் **மூன்று (03)** பொதுவான ஒழுக்கநெறி பிரச்சினைகளை விளக்கி, ஒவ்வொரு பிரச்சினைக்கும் பொருத்தமான தீர்வுகளை முன்மொழிக. **(07 புள்ளிகள்)**

   iii. ஆய்வில், நிறுவனரீதியான ஒழுக்கநெறி மதிப்பீட்டுச் சபைகள் (Institutional Ethics Review Board) வகிக்கும் வகிபங்கினை விளக்குக. மேலும், கல்வி ஆய்வுக்கான ஒழுக்கநெறி அனுமதி விண்ணப்பத்தில் (Ethical Clearance Application) சேர்க்கப்பட வேண்டிய ஒழுக்கநெறி இணக்கத்துடன் (Ethical Compliance) தொடர்புடைய **மூன்று (03)** முக்கிய கூறுகளைக் குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் = 20 புள்ளிகள்)**

5. ஆய்வுச் செயன்முறை என்பது, கல்விச் சூழல்களில் ஆய்வு வினாக்களை ஆராய்ந்து புதிய அறிவை உருவாக்குவதற்காக பயன்படுத்தப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் முறையான அணுகுமுறையாகும்.

i. கல்வி ஆய்வுச் செயன்முறையின் முக்கிய கட்டங்களைக் குறிப்பிடுக. மற்றும் ஒவ்வொரு கட்டமும் ஆய்வின் கடினத்தன்மை (Rigor) மற்றும் தகுதியுடைமை ஆகியவற்றிற்கு எவ்வாறு பங்களிக்கிறது. என்பதை விளக்குக. **(07 புள்ளிகள்)**

ii. கல்வித்துறையில் ஒரு சிறந்த ஆய்வுப் பிரச்சினையின் **மூன்று (03)** பண்புகளை விவரிக்கவும். ஆய்வுப் பிரச்சினைகள் அடையாளம் காணப்படக்கூடிய **இரண்டு (02)** மூலங்களை விளக்கி, ஒவ்வொரு மூலங்களுக்கும் பொருத்தமான உதாரணங்களை வழங்குக. **(07 புள்ளிகள்)**

iii. ஆய்வுக் குறிக்கோள், ஆய்வு வினாக்கள் மற்றும் ஆய்வுக் கருதுகோள்கள் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்கி, கல்வி ஆய்விலிருந்து பொருத்தமான உதாரணங்களுடன் உங்கள் விடையினை விளக்குக. **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் = 20 புள்ளிகள்)**

6. ஆய்வுக் கருவிகள் மற்றும் தரவுச் சேகரிப்பு செய்முறைகளின் தரம், ஆய்வு முடிவுகளின் நம்பகத்தன்மை மற்றும் நியாயத்தன்மை மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

i. தொகைசார் (Quantitative) மற்றும் பண்புசார் (Qualitative) ஆய்வு தரவுச் சேகரிப்பு கருவிகளுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்கி, ஒவ்வொரு அணுகுமுறைக்கும் தலா ஒரு உதாரணத்தை வழங்குக. **(08 புள்ளிகள்)**

ii. கல்வி ஆய்வுக்கான வினாக்கொத்து ஒன்றை உருவாக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய **மூன்று (03)** முக்கிய அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

iii. உங்கள் ஆய்வில் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு வினாக்கொத்தின் தகுதியுடைமை (Validity) மற்றும் நம்பகத்தன்மை (Reliability) ஆகியவற்றை நிறுவுவதில் அடங்கிய படிகளை விவரிக்குக. **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் = 20 புள்ளிகள்)**

- *பதிப்புரிமை பெற்றது* -